## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No. 91/2021

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ம் நாள் வாதி தரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைக ளின்ஏற்பாட்டின்படிதிரு .A.S.அமீர்தீன், B.A.,B.L.,LLM,D.JJJ.Psy, மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 16.12.2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராணி | ஜாதி | : | |
| க /பெயர் | : | ராஜா | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா .சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் 1வது சாட்சியாவேன் . நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் . அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். அதில் எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ. எண். | தேதி | ஆவண விவரம் | குறியீடு செய்யப்பட்ட விவரம் | ஆட்சேபனை |
|---|---|---|---|---|
| 1 | 31.05.2006 | வாதிக்கு மாயகிருஷ்ணன் எழுதிக்கொடுத்துள்ள குடும்ப ஏற்பாட கைசீட்டு | வா.சா.ஆ.1 | உள்ளது |
| 2 | 19.08.2020 | பிரதிவாதி வாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல்வ ழக்கு எண், 64/2020 வழக்குரை -நகல் | வா.சா.ஆ.2 | இல்லை |
| 3 | 17.02.2021 | அசல் வழக்கு எண் .64/2020-ல் தாக்கல | வா.சா.ஆ-3 | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ்செய்துள்ள எதிர்வழக்குரை நகல் | | |
| 4 | 28.07.2020 | வாதிக்கு பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு -அசல் | வா.சா.ஆ.4 | இல்லை |
| 5 | 18.08.2020 | வாதிக்கு பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு. நகல் | வா.சா.ஆ.5 | இல்லை |
| 6 | 15.08.2021 | தாவா சொத்தின் புகைப்படங்கள் எண்ணிக்கை 4 மற்றும் குறுந்தகடு அதற்கான ரசீது | வா.சா.ஆ.6 | உள்ளது |

கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது. ஆனால் குறியீட செய்யப்படவில்லை.

28.06.2020 ம் தேதியிட்ட தாவா சொத்து சம்பந்தமாக வாதி , பிரதிவாதிக்கு இடையே ஆலங்கோட்டை கிராமத்தில் சமாதானம் பேசப்பட்டதற்கான தீர்மானம் . 06.07.2020 தாவா சொத்திற்கான சிட்டா கிராம நிர்வாக அலுவலர் வழங்கியது. 06.08.2013 ம் தேதியிட்ட வாதியின் மாமனார் மாயகிருஷ்ணன் இறப்பு சான்று . 13.08.2004 ம் தேதியிட்ட வாதி பெயரில் மன்னார்குடி வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்று,

மேற்படி வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க முதல் விசாரணை வழக்குக்குத் தேவையான இன்னும் சில ஆவணங்களை குறியீடு செய்யப்படுவதால் ஒத்திவைக்க கேட்டுக்கொள்ளப்பட்டு, அனுமதிக்கப்படுகிறது. எனவே முதல் விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்கு சம்மந்தமாக ஆவணங்களை பரிசீலித்து தனது தரப்பு சாட்சிகளிடம் ஆலோசனை பெற்று சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேறொரு தேதிக்கு குறுக்கு விசாரணை செய்ய கேட்கிறார். நீதிநலன்கருதி மேற்படி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

*(Sd/- A.S. Ameerdheen)*
District Munsif
Mannargudi.